இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப் பரீட்சை

**STP 9619–** கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.06.2023 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

- எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக

1.

I. கல்வி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறல் எண்ணக்கருவை **மூன்று** (03) வரைவிலக்கணங்கள் கொண்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

II. இடைநிலை பாடசாலை மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல் ஆலோசனை சேவையின் தேவையினை விளக்கிக்கூறுவதுடன், அது எவ்வாறு அவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவலாம் என்பதைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

III. பாரிய பொருளாதார நெருக்கடி நிலவும் இலங்கையில் வாழும் பாடசாலை மாணவர்களுக்கான வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவை மிகவும் அவசியமானது. இக்கூற்றினை **மூன்று** (03) உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

2.

I. ஆலோசனை சேவையின் போது நெறிமுறைகளை (Ethics) பின்பற்றுவதன் முக்கியத்துவத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

II. "ஆலோசகர்" தனது ஆலோசனை நாடியுடன் பொறுமையாக இருத்தல் வேண்டும். இக்கூற்றினை **நான்கு** (04) உதாரணங்களுடன் நியாயப்படுத்தவும்.

(08 புள்ளிகள்)

III. ஆலோசகரை நீர் எவ்வாறு வரையறுப்பீர்? ஆலோசகர், ஆலோசனை நாடி உறவினை விரிவாக விளக்குக.

(10 புள்ளிகள்)

3.

I. சிக்மண்ட் பிராய்டின் உளப்பகுப்பாய்வு நுட்பம் என்பதனால் கருதப்படுவது யாது? உளப்பகுப்பாய்வு நுட்பத்தின் பலங்கள் மற்றும் அதன் வரையறைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(07 புள்ளிகள்)

II. மானிடத்துவ நுட்ப அணுகுமுறை என்பதனால் கருதப்படுவது யாது? கார்ள் ரொஜரின் மானிடத்துவ நுட்ப அணுகுமுறையின் பலங்களை ஆராய்க.

(07 புள்ளிகள்)

III. கருத்தியல் நுட்ப அணுகுமுறை என்பதனால் கருதப்படுவது யாது? கருத்தியல் அணுகுமுறையின் பலங்கள் மற்றும் அதன் வரையறைகளை உதாரணங்களுடன் கலந்துரையாடுக?

(11 புள்ளிகள்)

4.

I. கற்றல் இயலாமைகள் மற்றும் குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் சிறப்பு அம்சங்களை குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

II. அ) விசேட தேவைகளை கொண்ட மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கும் போது பாடசாலை ஆலோசகர்களால் எதிர்கொள்ளக் கூடிய **இரண்டு (02)** பிரச்சினைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ) மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும்.

(10 புள்ளிகள்)

5.

I. ஆலோசனை சேவை செயன்முறையின் போது தகவல்களை திரட்டுவதற்காக பயன்படுத்தப்படும் **ஐந்து (05)** நுட்பமுறைகளை குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

II. நடத்தை பிரச்சினையுடைய பிள்ளையொன்றினை அவதானிக்கும் வகையில் ஒரு அவதானிப்பு படிமுறையொன்றினை ஒரு வார காலத்திற்கு தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

III. ஆசிரியர் என்ற வகையில் மேலே குறிப்பிட்ட பிள்ளைக்கு எவ்வாறு உதவலாம் என்பதை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

6.

I. "பொருத்தப்பாடு ஆளுமை" என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

(05 புள்ளிகள்)

II. (அ) மாணவருக்கு நல்ல பொருத்தப்பாட்டு ஆளுமையை கட்டியெழுப்புவதற்கு தடைகளை ஏற்படுத்தும் காரணிகள் குறைந்தது **மூன்றினையாவது (03)** பெயரிடுக.

(03 புள்ளிகள்)

(ஆ) மேலே குறிப்பிட்ட காரணிகளில் ஏதேனும் **இரண்டினை (02)** உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

III. நீங்கள் மேலே (ஆ) இல் குறிப்பிட்ட காரணிகளில் ஒன்றினை பாதிக்கப்பட்ட மாணவருக்கு ஆசிரியர் என்றவகையில் நீங்கள் எவ்வாறு உதவி செய்ய முடியும் என்பதனை பரீட்சிக்குக.

(09 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -